செ.வெ.எண : 50 நாள்:17.10.2017

**பத்திரிக்கை செய்தி**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிவாயு நுகர்வோர்களுக்கு எரிவாயு உருளை பதிவு செய்வதில் மெத்தனப்போக்கு அல்லது முறைகேடுகள், எரிவாயு உருளைகள் வழங்குவதில் காலதாமதம், முறைகேடுகள் குறித்து நுகர்வோர்கள் தங்கள் குறைகளைப் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அனைத்து எண்ணெய் நிறுவன எரிவாயு முகவர்கள், மாவட்ட எரிவாயு ஒருங்கிணைப்பாளர், எரிவாயு நுகர்வோர்கள் கலந்து கொள்ளும் **எரிவாயு நுகர்வோர் கூட்டம் 23.10.2017** அன்று பிற்பகல் **4.00** மணியளவில் திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து **மாவட்ட வருவாய் அலுவலர்** தலைமையில் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு எரிவாயு நுகர்வோர்கள் தங்கள் குறைகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.